1982 மார்ச் 8]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அந்த ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் என்பதைப் பற்றி அரசு பரிசிலனை செய்யவில்லை. அவர் கூறிய மற்றப் பிரச்னைகளைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புவது, எதையும் ஜெனரலைஸ் செய்யாமல், செங்கற்பட்டு தொகுதியில் இன்னின்ன இடத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்குத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தையாபுரம், இராமச்சந்திராபுரம் கிராமங்களுக்கான குடிநீர் திட்டம்.

* வினா எண் 415—திரு. ஆர். கே. பெருமாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்தையாபுரம், இராமச்சந்திராபுரம் கிராமத்திற்கு விளாத்தி குளம் ஆற்றில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் நோக்கம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீடு ?

(இ) எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ), (ஆ) மற்றும் (இ) இராமச்சந்திராபுரம் உள்ளடங்கிய பனையடிப்பட்டி மற்றும் நான்கு சிற்றூர் களுக்கான கூட்டு குடிநீர் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 9.35 லட்சம் ஆகும். தற்போது திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவடைந்து சோதனை ஓட்ட அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. புதூர் ஒன்றியத்தைச் சார்ந்த முத்தையாபுரம் சிற்றூர் பிரிவு 6 (நல்ல குடிநீர் நிலைகள் உள்ளது)-ல் வருவதால், இச்சிற்றூருக்கான குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், மாநிலத்திலுள்ள பிரிவு 6-ல் அடங்கியுள்ள அனைத்து சிற்றூர்களில் திட்டங்கள் மேற்கொள்ளப் படும்போது, பரிசீலிக்கப்படும்.

திருச்சி, மதுரை மாவட்டக் காடுகளில் கிடைக்கும் விலையுயர்ந்த பச்சைக் கற்கள்.

* வினா எண் 416—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், வெள்ளியணை, மதுரை மாவட்டம் வேடசந்தூர், பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளில் விலையுயர்ந்த பச்சைக்கற்கள் கிடைப்பது அரசுக்குத் தெரியுமா ?